## சார்பு நீதிமன்றம், அரூர், தருமபுரி மாவட்டம்

## OS.No.220/2019

வாதி தரப்பு சாட்சி– 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிகாமணி | கணவர்/தகப்பனார் பெயர் | : | சாமிக்கண்ணு |
| கிராமம் | : | ராயப்பன்கொட்டாய் | வட்டம் | : | அரூர் |
| சாதி | : | | தொழில் | : | ஆசிரியர் |
| மதம் | : | இந்து | வயது | : | 55 |

Solemnly affirmed/sworn by **Bench Clerk GII,** in accordance with the provisions of Act of 1873, on this the **21st day of September 2024**.

PW–1

வாதி வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

தாவாவில் நான் வாதி ஆவேன். எனது முதல் விசாரணையை விரிவாக துவக்கி சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதனை என் முதல் விசாரணையின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் இருக்கும் சங்கதிகள் சரியானவை. அதில் இருப்பது என்னுடைய கையொப்பம்தான்.

1. 02.05.2018 ம் தேதியிட்ட தாவா சொத்தை நான் கிருஷ்ணமூர்த்தியின் பொது அதிகார முகவர் சாமிகண்ணுதேவரிடம் இருந்து பெற்ற கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வ.சா.ஆ.1

2. 30.12.2011 ம் தேதியிட்ட தாவா சொத்திற்கு தெற்கில் உள்ள சொத்தை நான் கிருஷ்ணமூர்த்தியின் பொது அதிகார முகவர் சாமிகண்ணுதேவரிடம் இருந்து பெற்ற கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வ.சா.ஆ.2

3. 28.04.1995 ம் தேதியிட்ட கிருஷ்ணமூர்த்தி தாவா சொத்திலும் அதற்கு தெற்கில் உள்ள சொத்திற்கும் கட்டிடம் கட்டுவதற்கு அரூர் பேரூராட்சியில் பெற்ற வரைபடம் அசல் வா.சா.ஆ.3

4. 13.09.2004 ம் தேதியிட்ட கிருஷ்ணமூர்த்தி தாவா சொத்திற்கும் அதற்கு தெற்கில் உள்ள சொத்திற்கம் சாமிகண்ணு தேவருக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகார பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4.

5. 13.07.1994 ம் தேதியிட்ட தாவா சொத்தையும் அதற்கு தெற்கே உள்ள சொத்தையும் கிருஷ்ணமூர்த்தி என்பவர் சம்பத், சசி, அனு, பாலா, சுஜிதா, சூரியா ஆகியோரிடம் இருந்து கிரையம் பெற்ற கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5

6. 13.07.1994 ம் தேதியிட்ட தாவா சொத்தையும் அதற்கு தெற்கே உள்ள சொத்தையும் கிருஷ்ணமூர்த்தி என்பவர் சம்பத், சசி, அனு, பாலா, சுஜிதா, சூரியா ஆகியோரிடம் இருந்து கிரையம் பெற்ற கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6

7. 13.07.1994 ம் தேதியிட்ட தாவா சொத்தையும் அதற்கு தெற்கே உள்ள சொத்தையும் கிருஷ்ணமூர்த்தி என்பவர் சஞ்சீவன், கிருஷ்ணமூர்த்தி, சம்பத், சேகர், குமார், ரவி, பார்த்திபன், ஆகியோரிடம் இருந்து கிரையம் பெற்ற கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.7.

8. 13.12.2017 ம் தேதியிட்ட தாவா சொத்திற்கு மேற்கில் உள்ள சொத்தை பிரதிவாதி, ரவிந்திரன் என்பவரிடம் இருந்து கிரையம் பெற்ற கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.8

9. தாவா சொத்திற்கு வாதி பேரில் கூட்டாக உள்ள பட்டா கணினி நகல் வா.சா.ஆ.9

மேற்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்து கொண்டு தாவா படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

இல்லை

Sd/-S.ASSEEN BANU,
Sub Judge, Harur